இணைப்பு.

(218 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

ஐந்தாண்டுத் திட்டங்களையும் மற்றும் ஆண்டுத் திட்டங்களையும், மைய திட்டக் குழுவின் ஒப்புதலுடன், வரையறுத்து இறுதியாக்கும் பணியில் மாநிலத் திட்டக் குழுவும் பங்கேற்கிறது.

2. மாநிலத் திட்டக் குழுவிற்கு, 1986 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு ஆண்டுத் திட்டத்தின் பகுதி II திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை இறுதியாக்கும் பொறுப்பு வழங்கப்பட்டது. இதற்கு முன் பகுதி II திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு, மாநிலத் திட்ட குழு ஆய்வு செய்த பிறகு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அந்தப் பட்டியல்களின்படி தலைமைச் செயலகத் துறையின் கருத்துக்கள் நிதி மற்றும் திட்டம் (மற்றும்) வளர்ச்சித் துறைகளின் பரிசீலனைக்கும், ஒப்புதலுக்கும் அனுப்பப்பட்டு அதன் பிறகு, அவை 'நிலைத்த நிதி ஆணைக் குழு'வின் முடிவிற்கு அனுப்பப்பட்டு வந்தன. தற்பொழுது, மாநிலத் திட்டக் குழு பகுதி திட்டங்களை இறுதியாக்கும் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுள்ளது. இதனால் பகுதி II திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நேராக நிதி நிலைக் குழுவின் முடிவிற்கு அனுப்பப்படும்.

3. மாநிலத் திட்டக் குழு, மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1987-88 ஆம் ஆண்டுக்கான 'குன்னூர் ஹல்லா' நீர்ப்பிரிமுகடு (Water shed management) மேலாண்மைத் திட்டத்தை வகுக்கும் பொறுப்பையும் மேற்கொண்டுள்ளது.

கீழ்க்கண்ட மாவட்டங்களில், மாவட்டத் திட்டப் பிரிவுகள் (District Planning Cells) ஏற்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

1. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.
3. நீலகிரி மாவட்டம்.
2. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் (மற்றும்)

இம்மாவட்டத் திட்டப் பிரிவுகள் மாநிலத் திட்டக் குழுவின் கட்டுப்பாட்டில் இயங்கி திட்டம் தொடர்புள்ள பல்வேறு பணிகளைக் கவனிக்கும். படிப்படியாக இத்திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் நீட்டிக்கப்படும்.